# தேவனுடைய தெய்வீக ஆலயமும் நீங்களும்!



இதுவரை கேட்டிராத

மிகச்சிறந்த செய்தி!

உங்களை பாதிக்கும் உண்மைகள்!

## ஆச்சர்யமூட்டும் ஓர் உண்மை

ஆகம்போடியாவிலுள்ள 402 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருக்கும் அங்க்கோர் வாட் என்ற இடம்தான் உலகத்திலேயே மிகப்பெரிய தொழுகை ஸ்தலமாகும். முதன் முதலில் இந்து மத ஆலயமாகக் கட்டப்பட்ட இது, 12ம் நூற்றாண்டின் இறுதியில் புத்த மத தொழுகை ஸ்தலமாக மாறியது. எனினும், இன்று இது சுற்றுலா ஸ்தலத்தைக் காட்டிலும் சற்று அதிகமாகவே மக்களிடம் செல்வாக்கைப் பெற்றிருக்கிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் மற்றுமொரு ஆலயம் கட்டப்பட்டது – ஆனால் அது நேரடியாக தேவனுடைய கரத்திலிருந்து பெற்ற மாதிரியின்படியே கட்டப்பட்டதாகும். இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்கும் வரை வனாந்தரத்தில் சுற்றித் திரியும்போது, தேவன் அவர்களுடன் தங்குவதற்காக இத்திட்டம் மோசேயிடம் கொடுக்கப்பட்டு, எளிதில் தூக்கிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டது. பின்னர், தேவன் ஒரு நிரந்தரமான ஆலயத்தை எருசலேமில் கட்டும்படியாக வழிநடத்தினார். அந்த ஆலயம் அழிக்கப்பட்டு ஒருமுறைக்கும் மேல் மீண்டும் எடுத்துக்கட்டப்பட்டது.

இன்று, எருசலேமில் ஆலயம் இல்லாமல் இருந்தாலும், கடைசிக் காலத்தில் வாழக்கூடிய மக்களுக்கும் இன்றும் ஒரு முக்கிச் செய்தியை அறிவித்துக்கொண்டுதான் இருக்கின்றது. ஆச்சர்யம் என்னவென்றால், அதில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் அனைத்தும் மனுக்குலத்தை மீட்பதற்கும், நம் உலகத்தை கறைபடுத்திக்கொண்டிருக்கும் பாவத்தின்

எந்த ஒரு சுவடும் நித்தியத்திற்கும் இல்லாவாறு அகற்றுவதற்கும் தேவன் கொடுத்த விரிவான திட்டங்களைப் வெளிப்படுத்துகின்றன என்பதை ஒரு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே அறிந்துள்ளனர். இதைக் குறித்து இன்னும் ஆழமாக நாம் படிப்போம்.

## *ஆசரிப்புக்கூடாரத்தைக் குறித்த வேதாகம அடிப்படையிலான உண்மைகள் இதோ!*

### 1 பூலோக ஆசரிப்புக்கூடாரம் ஓர் அடையாளமாகும்

ஆதிகால எபிரெய ஆசரிப்புக்கூடாரமானது பரலோகத்திலுள்ள தேவனுடைய ஆலயத்தின் சிறிய அளவிளான மாதிரி என்பது உங்களுக்குத் தெரியுமா? (எபிரெயர் 8:2, 5ஐ படிக்கவும்). எவ்வாறு வெள்ளை மாளிகையில் உலகளாவிய பிரச்சனையின்போது அமெரிக்க அதிபர் இராணுவப்படைகளுக்கு கட்டளை கொடுப்பதற்காக "சூழ்நிலை அறை" என்று ஒன்று உள்ளதோ, அதைப்போலவே இந்தப் பரலோக அலயமானது அண்டசராசரத்தையும் கண்காணித்து கட்டளைப் பிறப்பிக்கும் ஒரு கட்டளை மையாக செயல்படுகிறது (வெளிப்படுத்தல் 7:15ஐ படிக்கவும்). இதற்கும் மேலாக, இந்த ஆலயத்திலிருந்துதான் மனுக்குலத்தை பாவத்தின் சாபத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் மீட்கும்படியாக தேவன் அவருடைய திட்டத்தை செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்.

## 2 பூலோக ஆசரிப்புக்கூடாரமானது ஒரு எடுத்துக்காட்டாக செயல்பட்டது

லூசிபர் என்ற தூதன் முதலில் பாவத்தையும் அதின் சீரழிக்கும் தீமையையும் இந்த அண்டசராசரத்திற்குள் கொண்டுவந்தான். அவன் பரலோகத்திலிருந்து தள்ளப்பட்டப்பின்பு (வெளி. 12:7-9), பூமிக்கு வந்து தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்வதற்கு ஆதாமையும் ஏவாளையும் வழிநடத்தினான். இதனால் மனுக்குலம் முழுவதையும் மரணத்தின் வல்லமையின்கீழ் கொண்டுவந்தான். ஆனால், சிருஷ்டிகரோ, தமது மாபெரும் அன்பினிமித்தம் இயேசு கிறிஸ்துவின் பரிபூரணமான வாழ்க்கை மற்றும் பரிகரிக்கும் தியாக பலியின்மூலம் மனுக்குலத்தை மீட்கும் திட்டத்தை ஏற்கனவே செயல்படுத்தியிருந்தார் (ஆதியாகமம் 3:15).

இதனால்தான் தேவன் எபிரெய மக்களிடம் பூலோக ஆசரிப்புக்கூடாரத்தை அமைக்கச் சொன்னார். அது பாவ நெருக்கடியிலிருந்து நித்தியத்திற்கும் எவ்வாறு அவர் முடிவைக் கொண்டுவரப்போகிறார் என்பதை நாம் புரிந்துகொள்வதற்கான வழிகாட்டியாகும். "தேவனே உமது வழி பரிசுத்தஸ்தலத்திலுள்ளது." (சங்கீதம் 77:13; எபிரெயர் 9ஐ படிக்கவும்). ஆம், ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியும் பொருளும் பாவம் எவ்வாறு தோற்கடிக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது!

## 3 அதின் பலிமுறைகள் இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டின

எபிரெயர் 9:22 இவ்வாறு கூறுகிறது: "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." இதனாலேயே ஆலயத்தின் அன்றாட பலிமுறையில் ஒருவருடைய பாவத்திற்காக அக்குடும்பத்தின் தலைவனானவன் பாவமற்ற ஆட்டுக்குட்டியை கொன்று பரிகரிக்கவேண்டுமென்றிருந்தது. பழுதற்ற ஆட்டுக்குட்டியானது இயேசுவின் பரிபூரண வாழ்வை அடையாளப்படுத்தியது, அதாவது ஒரு நாள் பரிபூரணமான மேசியா மனுக்குலத்தின் பாவத்திற்கான பரிகாரமாக பலியாவார் என்பதைத் தீர்க்கதரிசனமாகச் சுட்டிக்காட்டியது. ஆட்டைக் கொல்லுதல் என்பது நாம் இரட்சிப்படைவதற்கு சிலுவையில் மரித்த இயேசுவின் மரணத்தை நிழலாட்டமாக வெளிப்படுத்தியது.

## 4 அதின் பாவநிவாரண நாள் நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தியது

ஆசரிப்புக்கூடாரத்தின் பாவநிவாரண நாளென்பது பக்திவினயமான நியாயத்தீர்ப்பின் நாளை அடையாளப்படுத்துகிறது (லேவியராகமம் 23:27). தேவனுடைய ஜனங்கள் ஒவ்வொரு பாவத்தையும் அறிக்கையிட்டு விட்டிருக்கவேண்டும். இதில் பங்குபெறாதவன் இஸ்ரவேலில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான் (வசனம் 29). அக்காலத்திலே இரண்டு ஆடுகள் தேர்வு செய்யப்பட்டது. ஒன்று "தேவனுடைய ஆடு" மற்றொன்று "போக்காடு"

என்று அழைக்கப்பட்டது, அது சாத்தானை சுட்டிக்காட்டியது (லேவி. 16:7, 8). தேவனுடைய ஆடு பலிசெலுத்தப்பட்டு மக்களுடைய பாவங்களுக்காகப் படைக்கப்படும் (வசனம் 10), ஆனால் போக்காடோ வனாந்தரத்திற்குள் விடப்படும், அங்கே அது பாளையத்திற்குப் புறம்பே மரிக்கும்படி விட்டுவிடப்படும் (வசனம் 10). இந்தச் சடங்கானது இறுதி நியாயத்தீர்ப்பில் மீட்கப்பட்வர்களையும் கைவிடப்பட்டவர்களையும் அடையாளப்படுத்தியது. இன்னும் சொல்லப்போனால் இயேசு மத்தேயு 13:36-43ல் தமது உவமையில் கூறிய கோதுமையையும் பதரையும் சுட்டிக்காட்டியது.

## 5 அது இன்று பரலோகத்திலுள்ள இயேசு கிறிஸ்துவை சுட்டிக்காட்டியது

எபிரெயர் 9:24 இவ்வாறு கூறுகிறது: "அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்தில்தானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரதியட்சயமாகம்படி பிரவேசித்திருக்கிறார்." இயேசு எதற்காக பரலோகத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கவேண்டும்? லேவியராகமம் 16:30ல் கூறப்பட்டுள்ள பாவநிவாரணநாள் இதைத் தெளிவாக விளக்குகிறது: "கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு, உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும்."

ஒவ்வொரு வருடமும் பாவநிவாரண நாளன்று, மகா பிரதான ஆசரியர், மக்களுடைய பிரதிநிதியாக, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, சடங்கின்மூலம் பூலோக ஆலயத்தில் சேகரிக்கப்பட்ட பாவக்கறையை சுத்திகரிப்பதை அடையாளப்படுத்துகிறது (லேவியராகமம் 16; 23:26-32). எபிரெயர் 4:14 "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்" என்று கூறுகிறது.

## நற்செய்தி!

நன்மைக்கும் தீமைக்கும், கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையேயான போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்திற்கான ஆதாரம் நமது இருதயங்கள் உட்பட இவ்வுலகின் பல்வேறு இடங்களில் நடப்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. உங்களுடைய தனிப்பட்ட வழக்கறிஞர் மூலம் நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்படமுடியும் என்பதே ஆசரிப்புக்கூடாரத்தின் செய்தியாகும். அவர் தமது வாழ்வை நமக்குப் பதிலாக சிலுவையில் கொடுத்து நமக்கான பாவநிவிர்த்தியை ஏற்படுத்தியுள்ளார். தேவனுடைய பரலோக ஆலயமானது ஒரு சுற்றுலா ஸ்தலமல்ல; அது மனுக்குலத்தின் இரட்சிப்பிற்காக செயல்படும் மையமாகும்! உங்களை மரணத்திலிருந்து மீட்கும்படியாக தேவன் அங்கிருந்து வேலை செய்துகொண்டிருக்கிறார்.




## இன்னும் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

‘தேவன் திட்டங்களை வகுத்தார்’ என்ற வேதபாடமானது பூலோக மற்றும் பரலாக ஆசாரிப்புக்கூடாரங்களைக் குறித்தும், வாழ்க்கையை மாற்றும் அவைகளின் ஆழமான அர்த்தத்தையும், வேதாகம அடிப்படையிலான உண்மைகளைக் குறித்தும் உங்களுக்குக் விளக்கும். உங்களுக்கான இலவச டிஜிட்டல் பிரதியை Plans17.AFTV.in-ல் இன்றே பதிவிறக்கம் செய்யவும்.

---

AMAZING FACTS
India

AmazingFactsIndia.org
Post Box No 51
Banjara Hills, Hyderabad 500034
+91 916 916 4480 | Bookstore.AFTV.in